## பாளையங்கோட்டை – நாங்குனேரியில்

# 5200 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

நெல்லை.ஆக.24.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் 858 நபர்களுக்கும் திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை வட்டத்தில் 4280 நபர்களுக்கும் பட்டாக்கள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை சட்ட பேரவைத்தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சுப்புலெட்சுமி மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.3.11 கோடி மதிப்பில் 921 பயனாளி களுக்கு வரன்முறை பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 4428 பயனாளிகளுக்கு ரூ.2.74 கோடி மதிப்பில் வரன்முறை பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளையும் சட்டபேரவைத்தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர். மனோகரன், மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர்.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

அதன்படி நாங்குநேரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய்த்துறை சார்பில் 403 பயனாளிகளுக்கு ரூ.1.59 கோடி மதிப்பில் வரன்முறை பட்டாக்களும், 455 பயனாளிகளுக்கு ரூ.1.35 கோடி மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாக்களும், வேளாண்மைத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.4.68 இலட்சம் மதிப்பில் விசை தெளிப்பான், பவர் டில்லர்களும், தோட்டக்கலைத் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.62 ஆயிரம் மதிப்பில் மாடிதொட்டம் தொகுப்பு, நடமாடும் காய்கனி, விற்பனை வண்டிகளும், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.11.41 இலட்சம் மதிப்பில் முதல்வரின் காக்கும் கரங்கள் மானியம் விடுவிப்பு சான்றுகளும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 50 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், என மொத்தம் 921 பயனாளிகளுக்கு ரூ.3.11 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 4280 பயனாளிகளுக்கு வரன்முறை பட்டாக்களும், வேளாண்மைத் துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு பவர் டில்லர், பவர் வீடர்களும், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை சார்பில் 1 பயனாளிக்கு பரிசோதனை கருவி, பால் உற்பத்தி தொடர்பான உபகரணங்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில் 5 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.61.80 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகளும், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பில் 10 பயனாளி களுக்கு முதல்வரின் காக்கும் கரங்கள் மானியம் விடுவிப்பு சான்றுகளும், மாவட்ட சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 33 பயனாளிகளுக்கு ரூ.1.84 இலட்சம் மதிப்பில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 92 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளும் என மொத்தம் 4428 பயனாளிகளுக்கு ரூ2.74 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்றப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சாதி, மதங்களை கடந்து அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பள்ளி குழந்தைகளின் சத்து குறைபாட்டை நீக்குவதற்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன் மூலம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் ரூ.11.77 கோடி மதிப்பீட்டில் 79875 மாணவ மாணவிகளும் பயனடைந்து வருகின்றனர். புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் ரூ.16.87 கோடி மதிப்பீட்டில் 16872 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் ரூ.9.96 கோடி மதிப்பீட்டில் 9963 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நேரடியாக நியாய விலைக்கடை சென்று பயனடைய முடியாத நிலையினை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களால் கருணையோடு துவக்கப்பட்ட திட்டமே தாயுமானவர் திட்டம். இதன்மூலம் நமது மாவட்டத்தில் 38930 நபர்களுக்கு சுமார் 621 வாகனங்கள் மூலம் அவர்களது இல்லம் தேடி சென்று நியாய விலைக்கடை பொருட்களை விநியோகம் செய்ய துவங்கியுள்ளது. வீடு இல்லாத நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடு வழங்குவதற்கான நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டி வழங்கப்படும் வீடுகளுக்கு ரூ.10 இலட்சத்தில் தமிழ்நாடு அரசு ரூ.7.50 இலட்சம் வழங்கி வருகிறது. அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வண்ணம் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

---

#### தமது வாழ்வை

# பாட்டாளிகள், உழவர்கள், ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக.24-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுதாகர் ரெட்டி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் "தமது வாழ்வை பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தவர்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் சுரவரம் சுதாகர் ரெட்டி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

தொடக்கக் காலத்தில் மாணவத் தலைவராக இருந்து, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, பின்னாளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைவராக உயர்ந்தது வரை சுதாகர் ரெட்டி அவர்கள் தனது வாழ்வைப் பாட்டாளிகள், உழவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்தார்.

கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தலைவர் கலைஞர் நினைவேந்தல் என அவர் தமிழ்நாடு வந்தபோதெல்லாம் அவரது அன்பையும் தெளிவான பார்வையையும் அருகில் இருந்து கண்டுணர்ந்திருக்கிறேன்.

நீதி மற்றும் மாண்புக்கான போராட்டத்துக்கு அவரது வாழ்வு தொடர்ந்து ஊக்கமளிக்கும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்தச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## முக்கிய தொழில்துறை மாநிலமான தமிழ்நாட்டில்

# பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் செயல்படும் நிலை என்ன?

### மக்களவையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!



சென்னை, ஆக.24-

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் தொடர்பாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி. மக்களவையில் எழுத்துபூர்வ கேள்விகளை எழுப்பினார்.

"பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாக, குறிப்பாக தமிழ்நாடு மாநிலத்திற்கு... அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

முக்கிய தொழில்துறை மாநிலமான தமிழ்நாட்டில் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) செயல்திறனை ஒன்றிய அரசு மதிப்பீடு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு பற்றிய விவரங்கள் என்ன?

குறிப்பாக தூத்துக்குடி மாவட்டத்தில் MSMEகளை மேம்படுத்த சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? எடுக்கப்பட்டிருந்தால் அதுகுறித்த விவரங்கள் என்ன?

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?" என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகள் கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில் துறை இணையமைச்சர் சுஷ்ரி ஷோபா கரண்ட்லஜே எழுத்துபூர்வமாக பதிலளித்தார். அதில்,

"பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) ஒன்றிய அரசின் திட்டமாக இருப்பதால், மாநில வாரியாக பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

தேவை மற்றும் நிதி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட கடன்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்துக்கான நிதி பயன்படுத்தப்படுகிறது.

PMEGP திட்டம் தொடங்கப்பட்ட 2008-09 நிதியாண்டு முதல் தற்போதைய நிதியாண்டில் (2025-26) 18.08.2025 தேதிவரைமாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மொத்தம் 28 ஆயிரத்து 95 கோடியே 76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு 1754.14 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

இதே கால கட்டத்தில் உத்திரப்பிரதேச மாநிலத்துக்கு 3791 கோடி ரூபாய், குஜராத்துக்கு 2378 கோடி ரூபாய், ஜம்மு காஷ்மீருக்கு 2075 கோடி ரூபாய் என வழங்கப்பட்டுள்ளன.

PMEGP திட்டத்தின் செயல்திறன் குறித்த மதிப்பீட்டு ஆய்வு எதுவும் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படவில்லை.

2008-09 நிதியாண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து நடப்பு 2025-26 நிதியாண்டில் 18.08.2025 வரை தமிழ்நாட்டில் 68,639 நுண்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உத்தேசமாக 6 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகிடைத்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் உட்பட நாட்டில் MSMEகளை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இவற்றில் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மட்டுமல்லாமல் குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை, தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம், குறு மற்றும் சிறு நிறுவனங்கள் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டம், MSME செயல்திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் திட்டம், MSME சாம்பியன்ஸ் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் பார்க்கலாம்.

**1. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்:**

புதிய நுண் நிறுவனங்களை அமைப்பதில் தொழில்முனைவோருக்கு உதவுவதற்கான ஒன்றிய அரசுத் திட்டம் இதுவாகும்.

PMEGP இன் கீழ், பொதுப் பிரிவு பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில் திட்டச் செலவில் 25% மற்றும் நகர்ப்புறங்களில் 15% மானியம்வழங்கப்படுகிறது.

பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், வடகிழக்கு பிராந்தியம், மலை, எல்லைப் பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்கள் போன்ற சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கிராமப்புறங்களில்35% மற்றும் நகர்ப்புறங்களில் 25% என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

**2. குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டம்:**

இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI), தனது உறுப்புக் கடன் நிறுவனங்கள் (MLIs) மூலம் நுண் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு (MSEs) பிணை பாதுகாப்பு மற்றும் மூன்றாம் தரப்பு உத்தரவாதம் இல்லாமல் வழங்கப்படும் கடன்களுக்கு... கடன் உத்தரவாதத்தை வழங்குவதற்காக, குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத அறக்கட்டளை நிதி (CGTMSE) நிறுவப்பட்டிருக்கிறது.

**3. தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம் (ESDP) திட்டம்:**

பட்டியல் சமுதாயத்தினர், பெண்கள், மாற்றுத்திறநாளிகள், முன்னாள் ராணுவ வீரர்கள், மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் இளைஞர்களை சுயதொழில் அல்லது கூட்டுத்தொழில் செய்ய ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

புதிய நிறுவனங்களை ஊக்குவித்தல், ஏற்கனவே உள்ள MSMEகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பது இதன் இறுதி நோக்கமாகும்.

**4. MSME செயல் திறனை உயர்த்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) திட்டம்:**

உலக வங்கியின் ஆதரவோடு செயல்படுத்தப்படும் ஒன்றிய அரசின் திட்டம் இது.

இத்திட்டத்தின் வழியாக புதுமை, டிஜிட்டல் மயமாக்கல், சந்தை அணுகல், கடன் போன்ற அம்சங்களில் MSME செயல்திறனை ஊக்குவித்து மேம்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், MSME துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக அனைத்துமாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கும் தலா ரூ. 5 கோடி மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5. MSME சாம்பியன்ஸ் திட்டம்:

MSME சாம்பியன்ஸ் திட்டம் என்பது நிலையான (ZED) சான்றிதழ் திட்டம், MSME போட்டி திட்டம் மற்றும் MSME புதுமையான வடிவமைப்பு மற்றும் டிஜிட்டல் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் ஒரு முழுமையான அணுகுமுறையாகும்.

இவ்வாறு நாட்டில் MSMEகளை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது" என்று அந்த பதிலில் ஒன்றிய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



சிவகங்கை மாவட்ட முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் ஜேம்ஸ் ஸ்டிபன் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காளையார் கோவில் தாலுகா வலையபட்டியில் உள்ள அவரது நினைவிடத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன்,திருமதி ஜோன்ஸ் ருசோ,திருமதி எஸ்தர்மேரி ஸ்டிபன், பொதுக்குழு உறுப்பினர் பி.டி.ஆர்.முத்து உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள்.



தேனி தெற்கு மாவட்டம் கடமலை , மயிலே ஒன்றியத்தில்தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் ஏற்பாட்டில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தார். உடன் மகாராஜன் எம்.எல்.ஏ. மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மாநிலத் தீர்மானக் குழு இணை செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில், மலைச்சாமி, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரபாகரன், சுகுமாரன், அபுதாகிர், ராமகிருஷ்ணன், முருகன், ஸ்டீபன்ராஜா, கடமலை, மயிலே ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பிரபாகரன், ஸ்டீபன், மற்றும் ஒன்றிய செயலாளர்கள் இளைஞரணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சி, 12 வது வார்டுக்குட்பட்ட, பொதுமக்களுக்கு வடசேரி முத்துக்குமார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாமினை மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பார்வையிட்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றார். உடன் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மண்டல தலைவர் ஜவஹர், மாநகர நல அலுவலர் ஆல்பர் மதியரசு, வட்ட செயலாளர்கள் முத்தரசன், முருகன் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உட்பட பலர் இருந்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் வடக்கு பகுதி துறைமுகத்தில் ரூ.58.50 கோடி மதிப்பீட்டில் புதிய தூண்டில் வளைவு துறைமுக கட்டுமானப் பணியை மாவட்டக் கழகச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தொடங்கி வைத்தார். 30 ஆண்டு கனவாக இருந்த திட்டத்தை நிதி ஒதுக்கி தொடங்கி வைத்த முதல்வர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினருக்கு நாட்டுப்படகு மீனவ சங்கத்தினர் நன்றி தெரிவித்தனர்.




தென்காசி தெற்கு மாவட்டம் கடையம் கிழக்கு ஒன்றியம் பாப்பாங்குளத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்து திட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் குமார், பொன் செல்வன்,அழகு சுந்தரம், ஒன்றிய பெருந்தலைவர் செல்லம்மாள் முருகேசன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் ,கிளை கழக செயலாளர்கள்,அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.